ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

43 T I

| வினாத்தாள் | புள்ளிகள் |
|---|---|
| I | |
| பரீட்சகர் 1 | |
| பரீட்சகர் 2 | |
| EMF | |

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2022 (2023)
General Certificate of Education (Ord. Level) Examination, 2022 (2023)

චිත්‍ර I
சித்திரம் I
Art I

පැය එකයි
ஒரு மணித்தியாலம்
*One hour*

※ எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.

சுட்டெண் :.......................................

● கீழே தரப்பட்டுள்ள ஒளிப்படத்தைப் பயன்படுத்தி 1 தொடக்கம் 5 வரையான வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.



**1.** இக் குன்றானது கலைநயமிக்க .................................... இனால் தனது அரச மாளிகையாக நிர்மாணிக்கப்பட்டதாகும்.

**2.** இக் குன்றின் பிரவேசப் பாதை அடிவாரத்திலுள்ள ........................................................... இன் மூலமாக அக் காலத்தில் வாழ்ந்த சிற்பக் கலைஞனின் நிர்மாணத்திறன் பிரதிபலிக்கப்படுகின்றது.

**3.** இலங்கை ஓவியக்கலை வரலாற்றின் ...................................... கலை மரபுப் பண்புகளை இக்குன்றிலுள்ள சித்திரங்களில் காணலாம்.

**4.** இங்கு கண்ணாடிப் பாறையில் எழுதப்பட்டுள்ள ...................................... மூலம் ஏறக்குறைய 500 பெண்களின் உருவங்கள் வரையப்பட்டிருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**5.** இங்கு தற்போது எஞ்சியுள்ள பெண்களின் மார்பளவு உருவங்களின் ஊடாக மேகப் பெண்கள் மற்றும் மின்னல் பெண்கள் குறியீடாகக் காட்டப்பட்டுள்ளனர் என்ற கருத்தை வெளிப்படுத்தியவர் ................................... ஆவார்.

● 6 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

**6.** தற்போது பாதுகாக்கப்பட்டு, கொழும்பு தேசிய நூதனசாலையின் வாயிற் புறத்தில் வைக்கப்பட்டுள்ள சமாதி நிலையிலுள்ள புத்தர் சிலை கண்டெடுக்கப்பட்ட இடம் எது?

.............................................................................................................................

**7.** ஸ்பெயினில் அமைந்துள்ள வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து ஓவியங்களைக் கொண்ட குகை எது?

.............................................................................................................................

[பக். 2 ஐப் பார்க்க

kalvi.lk

**8.** அநுராதபுரக் காலத்து வாகல்கட நிர்மாணங்களிடையே உயர்ந்த கலைநயமிக்க பண்புகளைக் கொண்ட வாகல்கட நிர்மாணம் எந்தத் தூபிக்கு அருகில் கண்டெடுக்கப்பட்டது?

..............................................................................................................................

**9.** உள்ளதை உள்ளவாறு காட்டுவதைவிட சித்திரிப்புக்கேற்ப செதுக்கப்பட்டதும் மொஹஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்டதுமான சிலை எது?

..............................................................................................................................

**10.** தற்போது கொழும்பு தேசிய கலாபவனத்தில் நாளாந்த கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள "பேயோட்டியின் மகள்" எனப்படும் ஓவியத்தை வரைந்த கலைஞர் யார்?

..............................................................................................................................

● **11** தொடக்கம் **15** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து **அதன்கீழ் கோடிடுக.**

**11.** கம்பளை யுகத்திற்குரிய லங்காதிலக விகாரையை நிர்மாணித்த கலைஞன்,
(1) தேவேந்திர மூலாச்சாரியார் ஆவார். (2) தெல்மட மூலாச்சாரியார் ஆவார்.
(3) ஸ்தபதிராயர் ஆவார். (4) கணேஷ்வராச்சாரியார் ஆவார்.

**12.** அறிஞர்களின் கருத்தின்படி அவுக்கன புத்தர் சிலை நிர்மாணிப்பின்போது ஆதிக்கம் செலுத்திய கலை மரபு,
(1) மதுரா (2) அமராவதி (3) காந்தார (4) குப்த

**13.** நிசங்க லதா மண்டபம் சிறப்பு வாய்ந்த நிர்மாணிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டமைக்கான காரணம்,
(1) கருங்கல் ஊடகத்தினால் அமைக்கப்பட்டதனாலாகும்.
(2) தூண்களின் உச்சி தாமரை மொட்டு வடிவத்தில் இருப்பதனாலாகும்.
(3) கலைநயமிக்கதாக வடிவமைக்கப்பட்ட கற்றூண்கள் என்பதனால் ஆகும்.
(4) கற்றூண்களை வேலியாகக் கொண்ட நீள் சதுர வடிவிலான மண்டபம் என்பதனாலாகும்.

**14.** சாஞ்சித்தூபி அமைக்கப்பட்டது,
(1) சுங்க அரசர் காலத்திலாகும். (2) மௌரிய அரசர் காலத்திலாகும்.
(3) சாதவாகன அரசர் காலத்திலாகும். (4) குப்த அரசர் காலத்திலாகும்.

**15.** வீனஸ் தி மெலோ,
(1) கிரேக்க ஹெலனிஸ்டிக் கால நிர்மாணக் கலைஞர்கள் பெண்களின் உருவங்களை செதுக்கும் ஆற்றலை வெளிப்படுத்திய சந்தர்ப்பமாகும்.
(2) பெண்களின் உடலழகை மிகைப்படுத்திக் காட்டும் கிரேக்க தொல்சீர் (கிளசிக்) யுகத்திற்குரியதாகும்.
(3) கிரேக்க தொன்மை யுக கலைப்படைப்புக்களிடையே உன்னதமான படைப்பாகும்.
(4) கிரேக்க தொல்சீர் (கிளசிக்) யுக பெண்களின் உடலின் அழகைக் காட்டும் வெண்கல நிர்மாணமாகும்.

● **16** தொடக்கம் **20** வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லினதும் கருத்தை விளக்கும் வகையில் முழுமையான ஒரு வாக்கியம் வீதம் எழுதுக.

**16.** சாதிலிங்கம் : ..............................................................................................
..............................................................................................

**17.** மினாரத் : ..............................................................................................
..............................................................................................

**18.** டெராகொட்டா : ..............................................................................................
..............................................................................................

**19.** சிரஸ்பத்த : ..............................................................................................
..............................................................................................

**20.** யாழி : ..............................................................................................
..............................................................................................

[பக் 3 ஐப் பார்க்க

kalvi.lk

- **21** தொடக்கம் **25** வரையில் தரப்பட்டுள்ள ஒளிப்படப் பகுதிகளுடனான நெருங்கிய தொடர்பைக் காட்டும் உருவை, எதிரிலுள்ள **A, B, C, D, E** ஆகிய உருக்களிலிருந்து தெரிவுசெய்து, அதனைக் குறித்து நிற்கும் ஆங்கில எழுத்தினைப் **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

**21.**  (.........)  A

**22.**  (.........)  B

**23.**  (.........)  C

**24.**  (.........)  D

**25.**  (.........)  E

- **26** தொடக்கம் **30** வரையான ஒவ்வொரு வாக்கியத்திலுமுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான சொல் / சொற்களை இட்டுப் பூரணப்படுத்துக.

**26.** தெகல்தொருவ விகாரையிலுள்ள ஓவியங்களிடையே 'வெள்ளை யானையைப் பரிசளித்தல்' ஓவியம் ............................................ ஜாதகக் கதையின் ஒரு சந்தர்ப்பத்தினைச் சித்தரிப்பதாகும்.

**27.** கண்டி யுகத்திற்குரிய கீழ்நாட்டு ஓவியங்களில் வெளிக்காட்டப்படும் ஆடை அணிகள், மனை அலங்கரிப்பு என்பன காரணமாக அவ் ஓவியங்களில் ............................................ பண்புகள் அதிகளவில் செல்வாக்குச் செலுத்துவதாகத் தென்படுகின்றது.

**28.** கற்பாறையைக் குடைந்து, சிலைகள் மற்றும் கற் செதுக்கல்களுடன் கூடிய தற்போது இனங்காணப்பட்டுள்ள மிகப் பெரிய குகையாக பொலன்னறுவை ............................. அறியப்படுகிறது.

**29.** கிறிஸ்தவ சமய கருப்பொருளைக் கொண்ட சித்திரங்களை வரையும்போது அதன் பின்னணிப் பாத்திரங்களுக்கு தேசிய பண்புகளையும் உள்நாட்டு பாத்திரங்களையும் பயன்படுத்திய கலைஞன் ........................ ஆவார்.

**30.** பிக்காசோவினால் வரையப்பட்ட ........................................ என்னும் ஓவியம் கனவடிவவாத மரபினுள் தோன்றிய முதல் ஓவியமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

[பக் 4 ஐப் பார்க்க

kalvi.lk

● **31** தொடக்கம் **35** வரையுள்ள வினாக்களுக்கு **F, G, H, I, J** ஆகிய ஒளிப்படங்களை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக


F


G


H


I


J

**31.** **F** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிலை வடிவமைக்கப்பட்டிருக்கும் ஊடகம் யாது?

..........................................................................................................................................

**32.** **G** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள நடராஜர் சிலையினால் வெளிப்படுத்தப்படும் எண்ணக்கரு சார்ந்த கருப்பொருள் யாது?

..........................................................................................................................................

**33.** **H** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள நடனமாதுவின் சிலை சிந்துவெளி நாகரிகத்திற்குரிய எவ்விடத்தில் கண்டெடுக்கப்பட்டது?

..........................................................................................................................................

**34.** **I** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிலையை வடிவமைத்த கலைஞர் யார்?

..........................................................................................................................................

**35.** **J** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிலை கிரேக்கத்தின் எந்த யுகத்திற்குரியது?

..........................................................................................................................................

● உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வர்ண ஓவியத்தை இனங்கண்டு, அதன் கலைப் பண்புகளைப் பகுப்பாய்வு செய்யும் விதத்தில் **36** தொடக்கம் **40** வரையில் தரப்பட்டுள்ள உப தலைப்புகளுக்கமைவாக பொருளுள்ள **ஐந்து** வாக்கியங்கள் எழுதுக. (தனிச் சொல்லினால் விடையளித்தால் புள்ளிகள் **வழங்கப்படமாட்டாது**).

**36.** காணப்படும் இடம் :..........................................................................................

..........................................................................................

**37.** கருப்பொருள் :..........................................................................................

..........................................................................................

**38.** ஒழுங்கமைப்பு :..........................................................................................

..........................................................................................

**39.** பயன்படுத்தப்பட்டுள்ள நுட்பமுறைகள் :..........................................................................................

..........................................................................................

**40.** பாவங்களின் வெளிப்பாடு :..........................................................................................

..........................................................................................

* * *

kalvi.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

43 I

32135


අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Ord. Level) Examination, 2022(2023)

චිත්‍ර I / சித்திரம் I / Art I

- ප්‍රශ්න අංක **36** සිට **40** දක්වා ප්‍රශ්න සඳහා පිළිතුරු සැපයීමට පහත සිතුවම භාවිත කරන්න.

  வினா இலக்கம் **36** தொடக்கம் **40** வரையிலான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழே தரப்பட்டுள்ள உருவப்படத்தினை பயன்படுத்துக.

  Use the following painting to answer the questions from No. **36** to **40**.



* * *

32135

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

43 T II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Ord. Level) Examination, 2022(2023)

| | |
|---|---|
| චිත්‍ර | II |
| சித்திரம் | II |
| Art | II |

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

✻ உங்கள் **சுட்டெண்ணை** விடைத்தாளில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் தெளிவாக எழுதுக.

✻ விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கும்போது உங்கள் சித்திரம் நன்றாக உலர்ந்திருத்தல் வேண்டும். ஈரமான சித்திரங்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளுதல் உங்களுக்குப் பாதகமாக அமையலாம்.

✻ நீர்வர்ணம், போஸ்ரர் வர்ணம், கெட்டிச்சாயம் (டெம்பரா), பஸ்ரல் வர்ணம் உட்பட கையில் ஒட்டிக் கொள்ளாத எந்தவொரு வர்ண ஊடகத்தையும் பயன்படுத்த முடியும்.

✻ பொருட்களின் தொகுதியை 73 cm உயரமுள்ள மட்டமான மேசையிலோ அல்லது பலகையிலோ வைக்கும்படி பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

**சுயாதீன ரேகைச் சித்திரமும் வர்ணச் சித்திர ஒழுங்கமைப்பும்**

✻ உங்களுக்கு முன்னாலுள்ள பொருட்கூட்டத்தை நன்றாக அவதானிக்குக.

1. பூர்வாங்க பரும்படிப் படத்தை முதலில் வரைக. இதற்காக உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வெள்ளைநிற A4 பருமட்டத் தாளைப் பயன்படுத்துக.
2. பொருட்தொகுதி உங்களுக்குக் காட்சியளிக்கும் விதத்தில் வரைந்து வர்ணந்தீட்டுக. இதற்காக வழங்கப்பட்டுள்ள விசேட வரைதல் தாளைப் பயன்படுத்துக.

✻ **இரண்டு வரைதல்களையும் ஒன்றாக இணைத்து பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்குக.**

✻ உங்களது வரைதலை மதிப்பிடும்போது பின்வரும் விடயங்கள் கருத்திற் கொள்ளப்படும் என்பதைக் கவனத்திற் கொள்க.

- **சுயாதீன ரேகைக் கற்றல்**

1. பருமட்டத் தாளிலுள்ள பூர்வாங்கப் பரும்படிப் படத்தில், உரிய ஊடகத்தைக் கையாளும் திறன்கள் *(05 புள்ளிகள்)*

- **வர்ணச் சித்திரம்**

2. தளத்துக்கு உகந்ததாகப் பொருட்தொகுதி கலைநுட்பத்துடன் ஒழுங்கமைக்கப்பட்டிருத்தல் *(05 புள்ளிகள்)*
3. அளவிடைகள், தூரநோக்கு, முப்பரிமாண விளைவு பற்றிய விளக்கம் *(05 புள்ளிகள்)*
4. தரப்பட்டுள்ள பொருட்களின் வெளித்தோற்றப் பண்புகளை எடுத்துக்காட்டல் *(05 புள்ளிகள்)*
5. வர்ண ஊடகங்களைக் கையாளும் திறன் *(05 புள்ளிகள்)*
6. பொருத்தமான வர்ணப் பின்னணியும் ஒட்டுமொத்த பூரணப்பாடும் *(05 புள்ளிகள்)*

**மிக முக்கியம் :**

பொருட்தொகுதி வைக்கப்பட்டுள்ள பலகையைப் பெரிய அளவில் வரையத் தேவையில்லை. பலகையின் அளவைப் பொருட்தொகுதிக்குப் பொருந்தும் வகையில் மாற்றி வரைவதற்கு உங்களுக்கு அனுமதி உண்டு.

✻ ✻ ✻

kalvi.lk

 32135

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

43 T III

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Ord. Level) Examination, 2022(2023)

චිත්‍ර III
சித்திரம் III
Art III

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

* நீங்கள் **ஒரு** வர்ணச் சித்திரத்தை மாத்திரமே வரைய வேண்டும்.
* உங்கள் **சுட்டெண்ணையும்** உரிய **வினா இலக்கத்தையும்** விடைத்தாளில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் தெளிவாக எழுதுக.
* விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கும்போது, உங்களது சித்திரம் நன்றாக உலர்ந்திருக்க வேண்டும். ஈரமான சித்திரங்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளுதல் உங்களுக்குப் பாதகமாக அமையலாம்.
* வர்ணந் தீட்டுவதற்கு நீர்வர்ணம், போஸ்ரர் வர்ணம், பெஸ்ரல் வர்ணம் உட்பட கையில் ஒட்டிக் கொள்ளாத எவ்வகை வர்ண ஊடகத்தையும் பயன்படுத்தலாம்.
* வரைவதற்கு விசேட வரைதற் தாளும் தேவையானவர்களுக்குத் திசுத்தாளும் வழங்கப்படும்.

**அ, ஆ, இ ஆகியவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியிலிருந்து ஒரு வினாவை மாத்திரம் தெரிவுசெய்க.**

### பகுதி அ - சித்திர ஒழுங்கமைப்பு

1. வழிபாட்டுத்தலம் ஒன்றில் வழிபாட்டில் ஈடுபடும் பக்தர்கள்.
2. மரநிழல் ஒன்றில் ஓய்வெடுக்கும் ஆண், பெண் விவசாயிகள்.
3. புதிய வீட்டு நிர்மாணப் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள்.
4. உடற்பயிற்சி நிலையம் ஒன்றில் உடற் பயிற்சியில் ஈடுபடுவோர்.

### பகுதி ஆ - அலங்கார ஆக்கம்

5. விலங்கு உருவங்களை ஆக்கச் சிறப்புடன் பயன்படுத்தி சிறுவர்களின் ஆடைக்குப் பொருத்தமாக பரவலடையும் விதத்தில் **9 × 9** அங்குல அளவுடைய புடவையொன்றிற்குப் பொருத்தமான பரவல் அலங்காரம் ஒன்றை வரைந்து நிறந் தீட்டுக.
6. பூக்கள், இலைகள் என்பவற்றை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தி பெண்களுக்குரிய குடையொன்றிற்கு பொருத்தமான முழுத் தள அலங்காரமொன்றை வரைந்து நிறந் தீட்டுக.
7. பாரம்பரிய அலங்காரம் மற்றும் வர்ண ஊடகத்தைப் பயன்படுத்தி வீட்டின் விராந்தா சுவரில் தொங்கவிடக்கூடிய முகம் பார்க்கும் கண்ணாடிச் சட்டகத்திற்குப் பொருத்தமான நிர்மாணமொன்றைத் திட்டமிட்டு வரைந்து நிறந் தீட்டுக.

### பகுதி இ - கிறபிக் சித்திரம்

8. பழரசப் போத்தல் ஒன்றில் ஒட்டுவதற்குப் பொருத்தமான **8 × 6** அங்குல அளவுடைய பெயர்ச்சுட்டி (Label) ஒன்றைத் திட்டமிட்டு வரைந்து வர்ணந் தீட்டுக.
9. அழகுசாதன நிலையம் ஒன்றிற்குப் பொருத்தமான பெயர்ப்பலகை ஒன்றை **6 × 10** அடி அளவில் ஆக்கபூர்வமான எழுத்துக்களையும், வடிவங்களையும் பயன்படுத்தி வரைந்து வர்ணந் தீட்டுக. (தாளுக்குப் பொருந்தும் வகையில் அளவிடைக்கேற்ப சிறியதாக்குக.)
10. இலங்கையில் புதிதாக அறிமுகப்படுத்த எதிர்பார்க்கும் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றிற்குப் பொருத்தமான இலச்சினை ஒன்றைத் திட்டமிட்டு வரைந்து வர்ணந் தீட்டுக. (**8 × 8** அங்குல அளவிலான பரப்பினுள் பொருத்தமான வடிவமொன்றைப் பயன்படுத்துக.)

* * *

kalvi.lk

Education கல்வி அධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page